**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>OS.67/2021</u>**

26.08.2025

## <u>PW- 2</u>

**<u>வா.சா.2 பத்மநாபன், த/பெ. ஜெயராமன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

மன்னார்குடி தெப்பக்குளம் வடகரையில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் - 2 ஆண்டுகளாக. இந்த வழக்கில் எனக்கு சாட்சி சொல்ல சம்மன் வரவில்லை என்றால் - சரிதான். நான் மன்னார்குடியில் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் - செங்கல் காளவாய் தொழில் செய்து வருகிறேன். இதுதான் எனக்கு ஆரம்பத்திலிருந்து தொழில் என்றால் - விவசாயம் செய்து வருகிறேன். நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது நான் சொன்ன சங்கதிகள் தான் என்றால் - சரிதான். அதில் காளாஞ்சிமேடு கிராமத்தில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். வழக்கு சொத்தில் 40 தென்னை மரங்கள் உள்ளதா என்றால் - தென்னை மரங்கள் உள்ளதா என்று தெரியாது. 30 வயதிற்கு மேற்பட்ட 40 தென்னைமரங்கள் வழக்கு சொத்தில் உள்ளது என்றால் - சரிதான். தாவா சொத்தில் 2 போர்வெல் உள்ளது என்றால் - 1 தான் உள்ளது. அந்த போர்வெல் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் - யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. அந்த போர்வெல் வாங்கி 20-30 வருடங்கள் இருக்குமா என்றால் - எனக்கு தெரியாது. அந்த போர்வெல்லிருந்து தான் பிரதிவாதி தண்ணீர் எடுத்து சாகுபடி செய்து வருகிறார் என்றால் - சரிதான். வாய்க்கால் தண்ணீரும் பாய்ச்சி வருகிறார். எந்த வாய்க்கால் வழியாக பாசனம் என்றால் - கொண்டி வாய்க்கால் வழியாக வருகிறது. கொண்டி வாய்க்கால் வழக்கு சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் - வடக்கு பக்கமும் கிழக்கு பக்கமும் வருகிறது. மேற்கிலிருந்து ஒரு வாய்க்காலும் வருகிறது. தாவா சொத்திற்கு அருகில், பிரதிவாதிக்கு சொத்துக்கள் உள்ளது என்றால் - சரிதான். அவருக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் - எனக்கு தெரியாது. அந்த சொத்துக்கள் பிரதிவாதியின் அப்பா பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் - தெரியாது. அந்த சொத்துக்களுக்கும் வழக்கு சொத்திற்கும் அத்துக்கள் எதுவும் கிடையாது என்றால் - சரிதான். பிரதிவாதியின் அப்பா மேற்கண்ட சொத்துக்களை வாங்கி 30 வருடங்கள் இருக்குமா என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு நான் எந்தவித உதவியும் செய்வது கிடையாது என்றால் - சரிதான். தாவா சொத்துக்களையும், அருகில் உள்ள சொத்துக்களின் பெயரிலும் 3ம் வாதியின் பெரியப்பா ராமதாஸ் என்பவர் இதே நீதிமன்றத்தில் சுவாதீனப்பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரிதான். அந்த வழக்கில் ராமதாஸ்க்கு எதிராக நான் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். ராமதாஸ்கிட்ட இருந்துதான் பிரதிவாதியின் தகப்பனார் கிரயம் வாங்கினார் என்றால் - எனக்கு தெரியாது. நான், வழக்கு சொத்துள்ள கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றும் மன்னார்குடியில் குடியிருந்து வருகிறேன் என்றால் - 5-6 வருடங்களாக தான் மன்னார்குடியில் குடியிருந்து வருகிறேன். கிராமத்தில் என்ன நிலவரம் என்று எனக்கு தெரியாது என்றால் - சரியல்ல. நான் கிராமத்தில்

பொறுப்பில் உள்ளேனா என்றால் - இல்லை. எனது முதல் விசாரணையில் வாதிக்கு உதவியாக இருந்ததா சொல்லியுள்ளது மேகநாதன் கேட்டுக்கொண்டதற்கிணங்க சொல்லியுள்ளேன் என்றால் - சரியல்ல. எந்த சர்வே நம்பரில் வழக்கு நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் - சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதி குறைவான விலைக்கு கேட்டதாக சொல்லியுள்ளது குறித்து தெரியுமா என்றால் - எனக்கு அதுபற்றி தெரியாது. 30.08.2020 ம் வருடம் வாதி மருத்துவமனைக்கு சென்றிருந்தபோது வழக்கு சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்துக் கொண்டதாக சொல்வது தவறு என்றால் - சரியல்ல. பிரதிவாதி கிரயம் பெற்ற நாளிலிருந்து தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் வாதிக்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.